எம்.சி.ஓபி.எண் : 252/2021 தேதி: 21/3/2024

மசா : 1

பெயர் : விஜயகுமார்

த/பெயர் : மணி

வயது : 32

**2ம் எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் விபத்து சமயத்தில் எனக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தை ஓட்டிச் சென்றேன். சம்பவ இடத்தின் வரைபடம் மற்றும் என்னுடைய ஓட்டுநர் உரிமம் நான் தாக்கல் செய்துள்ளேன். இந்த விபத்தானது புழல் ஜெயில் பக்கத்தில் நடந்தது. எனக்கு முன்னால் சென்று கொண்டிருந்த பொலிரோ கார் அதற்கு முன்னால் சென்ற லாரி திடிரென பிரேக் போட்டதால் பொலிரோ கார் இடது பக்கமாக திரும்பியதால் எனது வாகனத்தின் மீது மோதி இந்த விபத்து ஏற்பட்டது. போலிகார் எனது வாகனத்தை இடிக்கவில்லை என்றாலும் நான் தான் அந்த காரை இடித்ததால் அந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. அதனால் தான் சம்பவ இடத்தின் வரைபடத்தை தாக்கல் செய்யவில்லை என்றாலும் எனது அஜாகரதியால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றாலும் சரியல்ல. எனக்கு எந்தவித எலும்பு முறிவு ஏற்படவில்லை என்றால் எனக்கு வலது கை கைட்டை விரலில் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது. மசா ஆ2 மற்றும் மசா ஆ4 ல் மேற்படி விவரம் காணப்படவில்லை என்றால் சரியல்ல. அதனால் இந்த விபத்தினால் ஏற்பட்ட காயங்கள் சொற்ப காயங்கள் தான் என்றால் சரியல்ல. நான் எனது மனுவில் பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள நஷ்ட ஈடுகள் எந்த ஆதாரம் இல்லாமல் அதிகபடியாக கோரியுள்ளேன் என்றால் சரியல்ல. அதேபோல் விபத்தின் போது 1ம் எதிர் மனுதாரின் வாகனத்திற்கு உரிய ஆவணம் இல்லாததால் 2ம் எதிர் மனுதாரர் எனக்கு எவ்வித நஷ்ட ஈடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.